RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 82 | மார்ச்.31 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# கொளத்தூரில் மு.க.ஸ்டாலின், பெரம்பூரில் தவெக தலைவர் விஜய் வேட்புமனு தாக்கல்

சென்னை: மார்ச்.31-

கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலினும், பெரம்பூர் தொகுதியில் தவெக தலைவர் விஜய்யும் நேற்று (மார்ச் 30) வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி வேட்பு மனு தாக்கல் நேற்று தொடங்கியது. அதன்படி, கொளத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் இன்று மனுத்தாக்கல் செய்தார். அவருடன் அமைச்சர் சேகர்பாபு உள்ளிட்டோர் இருந்தனர். கொளத்தூர் தொகுதியில் தொடர்ந்து 4வது முறையாக ஸ்டாலின் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்.





அதேபோல், பெரம்பூர் தொகுதியில் தவெக தலைவர் விஜய்யும் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

இந்தத் தொகுதியில் தவெக சார்பில் விஜய், திமுக சார்பில் ஆர்.டி.சேகர், அதிமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாமகவின் சார்பில் ம.திலகபாமா, நாதகவின் வெற்றித்தமிழன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். தவெக தலைவர் விஜய் பெரம்பூர் தவிர்த்து, திருச்சி கிழக்கு தொகுதியிலும் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொளத்தூர் தொகுதியில் திமுக தலைவர் ஸ்டாலின், அதிமுக சார்பில் சந்தான கிருஷ்ணன், நாதக சார்பில் சவுந்திர பாண்டியன், தவெக சார்பில் வி.எஸ். பாபு ஆகியோர் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் 2011 ம் ஆண்டு முதல் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து போட்டியிட்டு வெற்றி பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 80,000 பேரிடம் கருத்துகளை பெற்று தேர்தல் அறிக்கையை தயாரித்துள்ளோம்: கனிமொழி

சென்னை: மார்ச்.31-

80,000 பேரிடம் கருத்துகளை பெற்று திமுகவின் தேர்தல் அறிக்கையை தயாரித்துள்ளோம். கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட 505 வாக்குறுதிகளில் 404 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்நிலையில், திமுகவின் தேர்தல் அறிக்கை காப்பியடிக்கப்பட்டதாக கூறுவது வேடிக்கையானது என தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு தலைவர் கனிமொழி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "அதிமுக தேர்தல் அறிக்கையை படிக்கக்கூட எங்களுக்கு நேரமில்லை. அதிமுகவின் தேர்தல் அறிக்கையை யாரும் பெரிதாக பொருட்படுத்துவதில்லை. நிறைவேற்றக்கூடிய தேர்தல் அறிக்கையை தயாரிக்க வேண்டும் என முதல்வர் அறிவுறுத்தியிருந்தார். 2021 ல் சட்டப்பேரவைத் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட 505 வாக்குறுதிகளில் 404 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



காலை உணவு திட்டம், வீடு தேடி மருத்துவம் போன்ற சொல்லப்படாத திட்டங்களையும் முதல்வர் நிறைவேற்றியிருக்கிறார்.

மீதமுள்ள 101 வாக்குறுதிகளில் 37 வாக்குறுதிகள் ஒன்றிய அரசின் ஒத்துழைப்பால் தான் நிறைவேற்ற முடியும் என்கிற காரணத்தால் அவை நிறைவேற்ற முடியாத சூழல் இருக்கிறது. மீது 64 திட்டங்கள் அப்பகுதியில் உள்ள மக்களின் எதிர்ப்பு காரணமாக நிறைவேற்ற முடியவில்லை.

80,000 பேரிடம் கருத்துகளை பெற்று தேர்தல் அறிக்கையை தயாரித்துள்ளோம். ஒவ்வொரு துறையில் உள்ள நிபுணர்களின் ஆலோசனைப்படி இந்த தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதிமுகதான் திமுகவின் திட்டங்களை தேர்தல் அறிக்கையாக அறிவித்துள்ளது.

அதிமுக ஆட்சியில் செயல்படுத்தாத வாக்குறுதிகளை பட்டியலிட்டால், அது நீண்டு கொண்டே போகும். அப்படியிருக்க திமுகவின் தேர்தல் அறிக்கை காப்பியடிக்கப்பட்டதாக கூறுவது வேடிக்கையானது.

பொள்ளாச்சியில் நடந்த பாலியல் குற்றத்தை எப்ஐஆர் கூட பதிவிட முன்வராமல், குற்றவாளிகளை காப்பாற்ற அத்தனை முயற்சிகளை செய்தது அதிமுக. ஆனால், திமுக ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பில் குற்றம் புரிந்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை முதல்வர் உறுதி செய்துள்ளார். " என்று தெரிவித்தார்.

## பாஜக வேட்பாளர் பட்டியல் வெளியாகும் முன்பாகவே மயிலாப்பூரில் களப்பணியைத் தொடங்கிய தமிழிசை

சென்னை: மார்ச்.31-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. தொகுதிப் பங்கீடு, வேட்பாளர் தேர்வில் அரசியல் கட்சிகள் மும்முரம் காட்டி வருகின்றன. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக 28 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

சென்னையின் முக்கிய அடையாளமான மயிலாப்பூர் தொகுதி அக்கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மயிலாப்பூர் தொகுதி பாஜகவுக்கு என உறுதியான அன்றே, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியுடன் பிரச்சார வாகனத்தில் தமிழக பாஜக முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜனும் வலம் வந்தார்.

பாஜக வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்படும் முன்பே பிரச்சாரத்துக்கு வந்தது குறித்து கேட்டதற்கு, தொகுதி பொறுப்பாளர் என்ற முறையில் பங்கேற்றதாக தெரிவித்தார். ஆனாலும், தொடர்ந்து



மயிலாப்பூரில் பல்வேறு நிகழ்வுகளிலும் அவர் பங்கேற்று வருகிறார்.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் பங்குனித் தேரோட்ட உற்சவம் நேற்று நடைபெற்றது. அப்போது, மக்கள் கூட்டத்துக்கு இடையே கட்சித் தொண்டர் ஒருவரது இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து தமிழிசை அங்கு வந்ததை மக்கள் வியப்புடன் பார்த்தனர்.

பின்னர், மாட வீதிகளில் வலம் வந்த தமிழிசை, பக்தர்களுடன் கலந்துரையாடினார். இளைஞர்கள், பொதுமக்களுடன் செல்ஃபி எடுத்துக்கொண்டார். தேரோட்டத் திருவிழாவைத் தொடர்ந்து, கட்சியின் மத்திய மண்டல நிர்வாகிகள் மற்றும் பொது மக்களுடன் இணைந்து பிரதமரின் 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் தமிழிசை பங்கேற்றார்.

இதெல்லாம் பார்க்கும்போது, மயிலாப்பூர் தொகுதி வேட்பாளராக தமிழிசை சவுந்தரராஜன் அறிவிக்கப்படவே அதிக வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது. மயிலாப்பூரில் அவர் ஏற்கெனவே பிரச்சாரத்தை தொடங்கிவிட்டனர் என்கின்றனர் கட்சித் தொண்டர்கள்.

## திருப்பூர் தெற்கில் சவால்களை எதிர்நோக்கும் பாஜக வெற்றியை தீர்மானிக்கும் சிறுபான்மையினர் வாக்குகள்

திருப்பூர்: மார்ச்.31-

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக் கூட்டணியில் திருப்பூர் தெற்கு சட்டப்பேரவைத் தொகுதி, பாஜகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அக்கட்சி இத்தொகுதியில் பல்வேறு சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இத்தொகுதியில் சிறுபான்மையினர் சமூக வாக்குகளை அறுவடை செய்வது யார் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டப்பேரவைத் தொகுதிகளில் அதிமுக கூட்டணியில் அவிநாசி (தனி), திருப்பூர் தெற்கு ஆகிய இரு தொகுதிகள் பாஜகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இதில், அவிநாசி தொகுதியில் பாஜக சார்பில் மத்திய அமைச்சர் எல்.முருகன் போட்டியிட உள்ளதாக கூறப்படுகிறது.

திருப்பூர் தெற்கு தொகுதியில் பாஜக மாநிலப் பொதுச் செயலாளர் ஏ.பி.முருகானந்தம் போட்டியிட உள்ளதாக அக்கட்சி வட்டாரத்தில் கூறப்படுகிறது. எனினும் அக்கட்சித் தலைமை இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு எதுவும் வெளியிடவில்லை.

திருப்பூர் மாவட்டத்தில் குறைந்த வாக்காளர்களைக் கொண்டது திருப்பூர் தெற்கு தொகுதியாகும். கடந்த பிப்ரவரி 23ம் தேதி வெளியிடப்பட்டுள்ள இறுதி வாக்காளர் பட்டியலின்படி இத்தொகுதியில் 289 வாக்குச் சாவடிகள் உள்ளன.

94 ஆயிரத்து 579 ஆண் வாக்காளர்களும், 99 ஆயிரத்து 11 பெண் வாக்காளர்களும், மூன்றாம் பாலினத்தவர் 24 பேர் என மொத்தம் ஒரு லட்சத்து 93 ஆயிரத்து 614 பேர் உள்ளனர்.

இந்தத் தொகுதியில் கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் தற்போதைய சட்டப்பேரவை உறுப்பினர் க.செல்வராஜ், அதிமுக வேட்பாளரான சு.குணசேகரனைவிட 4,709 வாக்குகள் மட்டுமே அதிகம் பெற்று வெற்றி பெற்றார். இதற்கு மிக முக்கியக் காரணம் சிறுபான்மையினர் வாக்குகள் திமுகவுக்கு விழுந்ததுதான் என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

தற்போதைய தேர்தலில் திமுக சார்பில் மேயர் என்.தினேஷ்குமார் இந்தத் தொகுதியில் போட்டியிடுகிறார். எனினும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், பட்டியலின சமூகத்தினர், இஸ்லாமியர்கள் என பல்வேறு சமூகத்தினரும் அதிக அளவில் உள்ளனர்.

இந்தத் தொகுதியில் பின்னலாடை உற்பத்தி மற்றும் அதனைச் சார்ந்த ஜாப்ஒர்க் நிறுவனங்கள் அதிகம் உள்ளன. திருப்பூர் மாநகராட்சிக்கு உள்பட்ட பெரும்பாலான பகுதிகளைக் கொண்ட இந்தத் தொகுதியில் குப்பை பிரச்சினை, சொத்து வரி, தொழில் வரி, பாதாள சாக்கடை கட்டண உயர்வு, வீட்டு வரி உயர்வு, மின் கட்டணம், நூல் விலை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் இந்தத் தேர்தலில் எதிரொலிக்க வாய்ப்பு உள்ளது.

அதே வேளையில், சிறுபான்மையினர் சமூகத்தின் வாக்குகளை முழுமையாக அறுவடை செய்யும் வேட்பாளரே இந்தத் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்ற கருத்தும் நிலவி வருகிறது. வேட்புமனு தாக்கல் இன்று தொடங்க உள்ள நிலையில் பாஜக சார்பில் வேட்பாளர் அறிவிக்கப்பட்டால் களம் சூடுபிடிக்க வாய்ப்பு உள்ளது.

## "இந்தத் தேர்தலோடு ஸ்டாலின் விடைபெறப் போகிறார்" பெரம்பூரில் விஜய் பிரச்சாரம்

சென்னை: மார்ச்.31-

பெரம்பூர் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு ஊர்வலமாக வந்த தவெக தலைவர் விஜய், 'இந்தத் தேர்தலோடு முதல்வர் மு.க.ஸ்டாலின் விடைப்பெறப் போகிறார் ' என்று ஆவேசமாகக் பேசினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று (மார்ச் 30) தொடங்கியது. அதனைத் தொடர்ந்து தவெக தலைவர் விஜய் வேட்புமனு தாக்கல் செய்தார். இந்தத் தொகுதியில் திமுக சார்பில் ஆர்.டி.சேகர், பாமக சார்பில் ம.திலகபாமா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில், இன்று காலை தவெக தலைவர் விஜய் வேட்புமனு தாக்கல் செய்தார். தொடர்ந்து ஊர்வலமாக வந்த அவர் பிரச்சாரம் செய்தார்.

தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கிய விஜய், "நம்மைப் பிடித்தவர்கள் உள்ள இடத்திலிருந்து பிரச்சாரத்தைத் தொடங்க வேண்டும் என நினைத்தேன். தமிழகமே எனக்குப் பிடித்த இடம்தான். அதனால், தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் பிரச்சாரத்தைத் தொடங்கலாம். ஆனால் நம் வீட்டின் வாசலில் இருந்து, நம் தாய் வீட்டிலிருந்து தொடங்குவது



போல், பிரச்சாரத்தைத் தொடங்க முடிவு செய்தேன், அதனால் இங்கு பெரம்பூரில் இருந்து தொடங்குகிறேன்.

வட சென்னையின் அடையாளங்களான லூர்து அன்னை தேவாலயம், பிரசித்தி பெற்ற கோயில், பல மசூதிகள் இருக்கும் இந்த் தொகுதியில் பிரச்சாரத்தைத் தொடங்குகிறேன். 'உன்னை மதிக்கும் உழைக்கும் மக்கள் உள்ள தொகுதியிலிருந்து இருந்து பிரச்சாரத்தை தொடங்கு' என எனது மனம் சொன்னதால் இங்கிருந்தே தொடங்குகிறேன்.

என் நெஞ்சில் குடியிருக்கும் பெரம்பூர் மக்களே, போதைப் பொருள் புழக்கம் மிகுந்த, பெண்களுக்கு பாதுகாப்பில்லாத, ஊழல் மிகுந்த தமிழகத்துக்கு ஒன்றுக்கும் உதவாத திமுக ஆட்சிதான் காரணம். இப்படிப்பட்ட ஆட்சி நடத்திய ஸ்டாலின் இத்தேர்தலோடு விடைபெறப் போகிறார். நம் வீட்டுப் பெண் பிள்ளைகள், இரவில் கழிவறை செல்லக் கூட முடியவில்லை, மூதாட்டியைக் கூட விட்டுவைப்பதில்லை. டீக்கடையில் டீ குடிக்கச் சென்றால் கூட போதை ஆசாமிகள் வெட்டு, குத்துக்கு மக்கள் ஆளாகிறார்கள்.

இந்த தீய சக்தி திமுக ஆட்சியில் பாதுகாப்பு இருக்கிறதா?, இங்கு பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்கிறதா?, இங்கு மக்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறதா?, ( விஜய்யின் கேள்விக்கு இல்லை என தவெகவின ஆர்ப்பரித்தனர்). ஸ்டாலின் ஆட்சிக்கு மக்கள் பாதுகாப்பு மீது அக்கறையில்லை. தன் குடும்பத்தின் சொத்தைப் பெருக்குவதிலேயேதான் அக்கறை.

நகராட்சி நிர்வாகத் துறை வேலைவாய்ப்பில் நடந்துள்ள ஊழல் இளைஞர்கள் மீதான அநீதி. மக்களுக்குப் பாதுகாப்பு தர இயலாத, மக்கள் மீது அக்கறையில்லாத இந்த திமுக ஆட்சியைத் தூக்கி எறிவோம்.

அதனால், கொள்ளையடித்தப் பணத்திலிருந்து அவர்கள் ஓட்டுக்குப் பணம் கொடுத்தால் அதை, வாங்கிக் கொண்டு பதிலுக்கு அவர்கள் காதில் விசில் ஊதி அனுப்புங்கள். உங்கள் மகன், அண்ணன், தம்பி, பிள்ளை என நினைத்து எனக்கு வாக்களியுங்கள். எனக்கு ஒருமுறை வாக்களியுங்கள், வாய்ப்பு கொடுங்கள்.

ஏப்ரல் 23ம் தேதியன்று மறவாமல் வாக்களியுங்கள். ஜென் ஸீ இளைஞர்களே வாக்களிக்கத் தவறிவிடாதீர்கள். தேர்தல் நாளில் வாக்குப் பதிவு இயந்திரத்தில் விசில் சின்னத்துக்கு எதிரான பொத்தானை அழுத்தத் தவறாதீர்கள். நம்பிக்கையாக இருங்கள். நல்லதே நடக்கும்." என்று விஜய் பிரச்சாரத்தில் பேசினார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**



■ தமிழகத்தில் நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் மீண்டும் தமிழரசி ரவிக்குமார் போட்டியிடுகிறார். இதனை முன்னிட்டு, திமுக தலைவர் மு க ஸ்டாலின் மற்றும் சபரிசன் சென்னையில் அவரை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் எம்பி கனிமொழி இருந்தார்.இந்த சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் கவனம் பெற்றுள்ளது.

## சிவகங்கை மாவட்டத்தில் PNG இணைப்புகளைப் பெறுவதற்கு விருப்பமுள்ள வணிக/ தொழில்துறை எல்பிஜி நுகர்வோர் குறிப்பிட்டுள்ள CGD நிறுவனத்தினை தொடர்பு கொள்ளலாம்

சிவகங்கை, மார்ச்.31-

சிவகங்கை மாவட்டத்தில் PNG இணைப்புகளைப் பெறுவதற்கு விருப்பமுள்ள வணிக/ தொழில்துறை எல்பிஜி நுகர்வோர். குறிப்பிட்டுள்ள CGD நிறுவனத்தினை தொடர்பு கொள்ளலாம் மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தகவல். எல்பிஜி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, இந்திய அரசாங்கத்தால் வணிக எல்பிஜி ஒதுக்கீடு ஆரம்பத்தில் 20% ஆகக் குறைக்கப்பட்டது. இது படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, தற்போது வணிக வாடிக்கையாளர்கள் நெருக்கடிக்கு முந்தைய அளவில் 70% வரை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.




இருப்பினும், சில நிபந்தனைகளை வாடிக்கையாளர்கள் பூர்த்தி செய்தால் மட்டுமே, முழு 70% ஒதுக்கீட்டின் பலனைப் பெற முடியும். அனைத்து வணிக/ தொழில்துறை எல்பிஜி நுகர்வோரும், கூடுதல் ஒதுக்கீட்டிலிருந்து எல்பிஜியைப் பெறுவதற்குத் தகுதி பெறுவதற்கு சம்பந்தப்பட்ட எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களில் (IOCL, HPCL, BPCL) பதிவு செய்ய வேண்டும். மேலும், அத்தகைய எல்பிஜி நுகர்வோர். குழாய்வழி இயற்கை எரிவாயு (PNG) இணைப்புகளுக்குப் பொருந்தும் வகையில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நகர எரிவாயு விநியோக (CGD) நிறுவனங்களில் பதிவு செய்து, PNG பெறுவதற்கான தங்கள் தயார் நிலையை வெளிப்படுத்த வேண்டும். அனைத்து வணிக வாடிக்கையாளர்களும் மேற்கண்ட நிபந்தனைகளுக்கு இணங்கி, 70% ஒதுக்கீட்டின் பலனைப் பெறலாம்.



■ செங்கல்பட்டு மாவட்டம், சோளிங்கநல்லூர் செயின்ட் ஜோசப் கல்லூரியில் 23.04.2026 அன்று 2026 சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதையொட்டி 100 % வாக்குபதிவை வலியுறுத்தி மாபெறும் தேர்தல் விழிப்புணர்வு பேரணியை தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன், கொடியசைத்து துவக்கிவைத்தார்கள். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ்குமார், துணை ஆட்சியர்(பயிற்சி) மணியரசன், தேர்தல் நடத்தும் அலுவலர் திருநாவுக்கரசு, அரசு அலுவலர்கள் மற்றும் மாணவ/மாணவியர்கள் கலந்துக்கொண்டனர்.

## மதுரை மேற்கு தொகுதியில் திமுக வேட்பாளர் ரகு பாலாஜி தீவிர வாக்கு சேகரிப்பு

### மீனாட்சி அம்மன் கோவிலில் செல்லூர் ராஜுவிற்கு பதிலடி - நார்வேயில் உதிக்கும் சூரியன்!!

மதுரை, மார்ச். 31

மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதியில் திமுக வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள ரகு பாலாஜி, நேற்று காலை மீனாட்சி அம்மன் கோவில் சென்று சாமி தரிசனம் செய்தார். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர், தன்னை வேட்பாளராக அறிவித்த கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். மேலும், தற்போது பதவி வகிக்கும் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் செல்லூர் ராஜு கடந்த 10 ஆண்டுகளாக தொகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தரவில்லை என்றும், இதனால் மக்கள் கடும்



அதிருப்தியில் உள்ளனர் என்றும் குற்றம் சாட்டினார். மேலும் செல்லூர் ராஜுவின் மேற்கே சூரியன் உதிக்காது என்ற கேள்விக்கு நார்வே நாட்டில் நள்ளிரவில் உதிக்கும் சூரியன் என்று அதிரடியாக பதில் அளித்தார். இந்த முறை மதுரை மேற்கு தொகுதியில் திமுக அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து, மேற்கு தொகுதிக்குட்பட்ட ஜெய்ஹிந்த்புரம் பகுதியில் தனது ஆதரவாளர்களை சந்தித்து வாழ்த்துகளை பெற்றார். பின்னர் திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்களுடன் இணைந்து வீடு தோறும் சென்று மக்களிடம் வாக்கு சேகரித்தார்.

## ராமநாதபுரம் மாவட்டத்தில் 4 சட்டமன்ற தொகுதிகளில் தி.மு.க.கூட்டணி இரண்டாவது முறையாக வெற்றி பெறச் செய்வதே லட்சியம் காதர்பாட்சா முத்துராமலிங்கம் உறுதி

ராமநாதபுரம் மார்ச். 31-

ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் தர்பாட்சா முத்துராமலிங்கம்தனது கொள்கை,கோட்பாடுகளில் ஒரு துளி கூட மாறாமல் சமூக நீதி காவலனாய் நின்று மக்கள் பணியே மகத்தான சேவை என தான் ஏற்றுக்கொண்ட கட்சி பொறுப்பை சிறப்பாக செயலாற்றி வருகிறார். தனது தந்தை காதர்பாட்சா வெள்ளைச்சாமி காலம் முதல் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தொடர்ந்து அரசியலில் செயல்பட்டு வருகிறார். கடந்த 2021 ஆம் ஆண்டு நடந்த தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் ராமநாதபுரம் மாவட்டத்தில்



உள்ள ராமநாதபுரம்,பரமக்குடி(தனி),முதுகுளத்தூர்,திருவாடானை ஆகிய நான்கு தொகுதிகளில் ராமநாதபுரம், பரமக்குடி(தனி), முதுகுளத்தூர் ஆகிய தொகுதிகளில் தி.மு.க.வும், திருவாடானை தொகுதியில் கூட்டணி கட்சியான காங்கிரஸ் கட்சியும் வெற்றி பெற்றதன் மூலம் தனக்கென ஒரு தனி முத்திரை பதித்தவர் தி.மு.க. மாவட்ட செயலாளரான எம்.எல்.ஏ. காதர்பாட்சா முத்துராமலிங்கம். கட்சி பணிகள் மட்டுமின்றி பொதுநல சேவைகளிலும் சிறப்பாக செயல்பட்டுவரும் காதர்பாட்சா முத்துராமலிங்கம் செயல்பாடு அனைத்து சமுதாய மற்றும் அனைத்து மத மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.மேலும் இவர் ராமநாதபுரம் மாவட்டத்தை தமிழகத்தின் நம்பர் ஒன் மாவட்டமாக மாற்றுவதில் எண்ணற்ற திட்டங்களையும், பணிகளையும் செய்து பொதுமக்கள் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகிறார். இதன்மூலம் தற்போது 2026 சட்டமன்ற தேர்தலில் ராமநாதபுரம் மாவட்ட அனைத்து சமுதாய மக்களின் மனங்களை வென்று ராமநாதபுரம் தொகுதியில் தான் வெற்றி பெறுவது மட்டுமின்றி மீதமுள்ள 3 தொகுதிகளில் தி.மு.க மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்து கோட்டைக்கு அனுப்புவதே தனது லட்சியமாக கொண்டு செயல்பட்டு வருபவர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம். இவரது அரசியல் லட்சிய பயணத்திற்கு அனைத்து தரப்பு மக்களும் பாராட்டி வருவது மிகுந்த வரவேற்பையும், எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது ஒரு தலைவனை மக்கள் ஏற்றுக்கொண்டால் எளிதில் விட்டு விடுவதில்லை அப்படி ஏற்றுக்கொண்ட தலைவர்களில் ஒருவர் தான் திமுக மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம்



## பழனியில் கட்சிப் பணியாற்றாத தமிழக வெற்றிக்கழக வேட்பாளரை மாற்றுச்சொல்லி தேர்தல் பணியை புறக்கணிப்பதாக நிர்வாகிகள் பேட்டி

திண்டுக்கல், மார்ச்.,31-

திண்டுக்கல் மாவட்டம் பழனி சட்டமன்ற தொகுதிக்கு தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக தெரியாத வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பிரவீன்குமார் என்பவர் கட்சித் தொண்டர்களுக்கு அறிமுகமில்லாதவர் என்பது கட்சி நிர்வாகிகளின் குற்றச்சாட்டு. வேட்பாளர் பிரவீன்குமார், அதிமுகவின் மூத்த தலைவர் செங்கோட்டையனின் தீவிர ஆதரவாளர் மகுடீஸ்வரனின் மகன் என்பதால் மட்டுமே அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தொண்டர்கள் கருதுகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கட்சிக்காகக் களத்தில் நின்று பணியாற்றிய உண்மையான தொண்டர்களைத் தலைமை கண்டுகொள்ளவில்லை என்ற வேதனை எழுந்துள்ளது.

கட்சித் தலைமை இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு, வேட்பாளரை மறுபரிசீலனை செய்து மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். வேட்பாளர் மாற்றப்படாவிட்டால், பழனி தொகுதியில் தேர்தல் பணிகளில் ஈடுபடப்போவதில்லை என்றும், பணிகளைப் புறக்கணிக்கப் போவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். புதிதாகத் தேர்தல் களத்திற்கு வந்துள்ள ஒரு கட்சிக்கு, ஆரம்பத்திலேயே இது போன்ற உட்கட்சிப் பூசல்கள் எழுவது அக்கட்சியின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கக்கூடும் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.



## தமிழ்நாடு முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டார்

ராமநாதபுரம், மார்ச்.,31-

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வரும் ஏப்ரல் 23 ம்தேதி நடைபெற உள்ள நிலையில் தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டார். ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தொகுதியில் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், ராமநாதபுரம் தொகுதியில் கட்சியின் மாவட்ட செயலாளரும், ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம், பரமக்குடி சட்டமன்ற வேட்பாளர் கே.கே. கதிரவன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இதைத் தொடர்ந்து தி.மு.க. வேட்பாளர்களான ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம், பரமக்குடி சட்டமன்ற வேட்பாளர் கே.கே.கதிரவன் ஆகிய இருவரும் நேற்று நண்பகல் சென்னையில் இருந்து மதுரை வழியாக ராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்தனர். இவர்களுக்கு மாவட்ட எல்கையான பார்த்திபனூர் மரிச்சுக்கட்டியில் தி.மு.க.சார்பில் சிறப்பான வரவேற்பு அளித்தனர். தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், பிரமுகர்கள் திரளாக கலந்து கொண்டு வேட்பாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் சால்வைகள், மலர்மாலைகள் அணிவித்து வரவேற்றனர். மேலும் திரளான பெண்கள் சாலையின் இருபுறமும் அணிவகுத்து நின்று பூசணிக்காயில் சூடம் ஏற்றி திருஷ்டி கழித்தனர்.

## தேனி மாவட்டம்தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் விழிப்புணர்வு

தேனி, மார்ச்.31-

தேனி மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 100%. சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம், வைகைஅணைப் பகுதியில் 100% சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக தேர்தல் விழிப்புணர்வு ராட்சத பலூன் பறக்கவிடுதல், கலை நிகழ்ச்சிகள், வாக்காளர் உறுதிமொழி ஏற்பு, விழிப்புணர்வு ரங்கோலி உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத்





தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. வாக்காளர்கள் அனைவரும் 100% வாக்களிப்பை உறுதி செய்வதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ந்து இருசக்கர வாகனப் பேரணிகள், கையெழுத்து இயக்கம், சுவரொட்டி விளம்பரம், துண்டுப்பிரசுரம் வழங்குதல், ரங்கோலி, நடைபயணப் பேரணி, மனிதசங்கிலி, தெருநாடகம், விளம்பரப் பதாகைகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விழிப்புணர்வுப் பணிகள் அனைத்து சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், சுற்றுலா தளங்கள் பொதுமக்கள் அதிகம் கூடும் முக்கிய இடங்களாக இருப்பதால், இன்றையதினம் வைகைஅணைப் பகுதியில் வாக்காளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும், வாக்களிப்பின் முக்கியத்துவத்தை நினைவூட்டும் வகையிலும், தேர்தல் தொடர்பான விழிப்பிணர்வு வாசகங்கள் அடங்கிய ராட்சத பலூனை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பறக்கவிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். தொடர்ந்து, வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் ஏற்றுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து, வாக்களிப்பின் அவசியத்தை எடுத்துரைக்கும் வகையில் நாட்டுபுறக் கலைஞர்களின் தேர்தல் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மேலும், மகளிர் சுய உதவிக்குழுக்கள் வாக்காளர்களிடையே 100% வாக்களிப்பை வலியுறுத்தும் விதமாக விழிப்புணர்வு ரங்கோலி மூலமும் மற்றும் கல்லூரி மாணவர்கள் 100% வாக்களிப்போம், எனது வாக்கு எனது உரிமை, வாக்களிப்போம் ஜனநாயக கடமையாற்றுவோம் உள்ளிட்ட தேர்தல் தொடர்பான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

பின்னர், வாக்களிப்பதன் அவசியம் குறித்து தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் ஆகியோரிடம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், தேர்தல் நடத்தும் அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர்.ரஜத்பீடன் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சந்திரா, தேர்தல் நடத்தும் அலுவலர் / தனித்துணை ஆட்சியர். கவிதா, உதவி செயற்பொறியாளர் (வைகைஅணை) ராஜசேகரன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் / வட்டாட்சியர் மருதுபாண்டி (பெரியகுளம்), செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பர்கூரில் பட்டாசு வெடித்து திமுக வேட்பாளர் மதியழகன் எம்எல்ஏவிற்கு உற்சாக வரவேற்பு



கிருஷ்ணகிரி, மார்ச் 31: கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளராக மீண்டும் போட்டியிட அறிவிக்கப்பட்டுள்ள மதியழகன் எம்எல்ஏவிற்கு பர்கூரில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சுமார் 5 ஆயிரத்திற்கும் அதிகமான திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரண்டுகொண்டு பட்டாசு வெடித்தும், மேள தாளத்துடன் கொண்டாட்டமாக அவரை வரவேற்றனர். சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்ற மதியழகன் எம்எல்ஏ, தனது தொகுதியான பர்கூருக்கு நேற்று வந்தார். பர்கூர் நகர எல்லையான திருப்பத்தூர் கூட்ரோடு பகுதியில் திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அவருக்கு மாலை அணிவித்து, சால்வை அணிவித்து வரவேற்பு அளித்தனர். அதனைத் தொடர்ந்து, திறந்த ஜீப்பில் ஊர்வலமாக சென்ற அவர், வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா மற்றும் மகாத்மா காந்தி சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் நிர்வாகிகளிடம் பேசிய மதியழகன் எம்எல்ஏ, "பர்கூர் தொகுதியில் கடந்த 5 ஆண்டுகளில் புதிய பேருந்து நிலையம், மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பான ஆட்சியை வழங்கி வருகிறார். அவரது பல திட்டங்களை அண்டை மாநிலங்களும் பின்பற்றுகின்றன. இந்த சட்டமன்றத் தேர்தலில் திமுக 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்று, 7வது முறையாக ஆட்சி அமைக்கும். எனவே அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு, என்னை 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்," என்று கேட்டுக்கொண்டார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.பி. வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத்தலைவர் தட்டரஅள்ளி நாகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி, கடலரசு மூர்த்தி, சந்திரன், மாவட்ட பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், நாகராஜன், கோதண்டன், சித்ரா சந்திரசேகர், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், அறிஞர், காந்தி, தனசேகரன், சுப்பிரமணி, சரவணன், மகேந்திரன், க.மகேந்திரன், சாந்தமூர்த்தி, இளையராஜா, நரசிம்மன், நாராயணன், செந்தில், குண.வசந்தரசு, செல்வம், குமரேசன், வெங்கட்டப்பன், தம்பிதுரை, ஜே கே எஸ் பாபு, பார்த்தீபன், அஸ்லம், வேலுமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், பொதுமக்கள் திரளாக பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் (MCC), அரசு உதவிப் பெறும் பிரிவின் 46வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது





தாம்பரம் மார்ச். 31- செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் உள்ள கிறித்தவக் கல்லூரியில் 46 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா வெகு விமர்சியாக நடைபெற்றது இதில் முதல்வர் முனைவர் பால் வில்சன் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு விருந்தினராக வேலூர் கிறித்தவ மருத்துவக் கல்லூரியின் (CMC) மேனாள் வெருவியியல் (வைராலஜி) துறைத் தலைவரும், புனே ஐ.சி.எம்.ஆர் தேசிய வெருவியியல் (வைராலஜி) நிறுவனத்தின் (NIV) மேனாள் இயக்குநருமான முனைவர் பிரியா ஆபிரகாம் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார். இவர்களுடன் கேரள மாநில மேனாள் வேளாண் துறை அமைச்சர் வி.எஸ்.சுனில் குமார் உள்ளிட்ட முக்கிய விருந்தினர்கள் இவ்விழாவில் பங்கேற்றனர். மேலும் 586 இளங்கலை (UG) மாணவர்கள், 356 முதுகலை (PG) மாணவர்கள், 1 ஆய்வியல் நிறைஞர் (MPhil) உட்பட, பல்வேறு துறைகளைச் சார்ந்த 943 மாணவர்கள் பட்டம் வழங்கப்பட்டது சிறப்பு விருந்தினரான பிரியா ஆபிரகாம் அவர்கள் தம் உரையில், தொடர்ச்சியான முன்னேற்றம், புத்தாக்கம் உள்ளிட்டவற்றின் வழிச் சமூகத்தின் பல்வேறு பிரிவினரையும் சென்றடையும் கல்விச் சேவைகளின் முக்கியத்துவத்தைத் தனது உரையில் குறிப்பிட்டார். பட்டதாரிகள் தங்களுக்குள்ளேயே ஆக்கபூர்வமான போட்டிகளில் ஈடுபட்டுப் புதிய உயரங்களை அடையவேண்டும் என ஊக்கமளித்தார். மேலும் இந்த விழாவில் அகில இந்திய நடுவண் அரசுப் பணியாளர் தேர்வில் (UPSC) 57 வது இடத்தைப் பெற்ற கிறித்தவக் கல்லூரி மாணவி செல்வி ஸ்ரீஜா, மேடையில் சிறப்பு விருந்தினர்களால் பாராட்டப்பெற்று பட்டம் பெற்றார். இக்கல்வியாண்டின் சிறந்த துறையாகத் தாவரவியல் துறை (Department of Botany) தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது. இந்த விழாவில் பேராசிரியர்கள் மாணவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

# பர்கூர் தொகுதியில் திமுக வேட்பாளர் தே.மதியழகன் மூத்த நிர்வாகிகளை சந்தித்து வாழ்த்து பெற்றார்



கிருஷ்ணகிரி, மார்ச் 31: 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு இந்தியா மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் பர்கூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் திரு. தே. மதியழகன் அவர்கள், கட்சியின் மூத்த மாநில நிர்வாகிகளை மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து பெற்றார். இதன்படி, மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் திரு. தி. செங்குட்டவன் (முன்னாள் எம்எல்ஏ), மாநில மகளிர் அணி ஆலோசனைக் குழு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் (முன்னாள் எம்எல்ஏ), மாநில தீர்மானக் குழு உறுப்பினர் திரு. எம்.வி. வெற்றிச்செல்வன் (முன்னாள் எம்பி) ஆகியோர்களை அவர் நேரில் சந்தித்து ஆதரவு மற்றும் வாழ்த்துகளை பெற்றார். சந்திப்பின் போது, தேர்தலில் மாபெரும் வெற்றி பெறுவதற்கான ஆலோசனைகள் பரிமாறப்பட்டதுடன், கூட்டணி கட்சிகளின் ஒத்துழைப்புடன் பர்கூர் தொகுதியில் உறுதியான வெற்றியை பெற அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என வலியுறுத்தப்பட்டது. பின்னர் மதியழகன் அவர்கள் கூறுகையில், "தமிழ்நாட்டின் மண், மொழி, மானத்தை காக்க உதய சூரியனின் ஒளி ஒவ்வொரு வீட்டிலும் ஒளிர வேண்டும். மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் நல்லாட்சியை தொடரச் செய்ய, இந்தத் தேர்தலில் மக்கள் பெரும் ஆதரவை வழங்குவார்கள். ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும். ஒன்றிணைந்து செயல்பட்டால் 200 தொகுதிகளில் வெற்றி பெற்று புதிய வரலாறு படைக்க முடியும்," என்றார். மேலும், "நமது கூட்டணி கட்சிகளின் ஒத்துழைப்பும், தொகுதி மக்களின் பேராதரவும் உறுதியாக உள்ளது. மாபெரும் வெற்றி பெற்று, அதனை நம் தலைவரின் கரங்களில் ஒப்படைப்போம்," என அவர் உறுதியுடன் தெரிவித்தார்.



# நாம் தமிழர் கட்சி வேட்பாளர் எழில் இளவரசி வேட்பு மனுத் தாக்கல்

## பரமக்குடி சட்டமன்ற(தனி) தொகுதி

பரமக்குடி, மார்ச்.31-

பரமக்குடி சட்டமன்ற(தனி) தொகுதி : நாம் தமிழர் கட்சி வேட்பாளர் எழில் இளவரசி வேட்பு மனுத் தாக்கல் . தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் 23 ம்தேதி நடைபெறுவதை முன்னிட்டு வேட்பு மனுத் தாக்கல் நேற்று 30 ம்தேதி தொடங்கியது. இதைத் தொடர்ந்து ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சட்டமன்ற (தனி)தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் எழில் இளவரசி பரமக்குடி தேர்தல் நடத்தும் அலுவலரும் வருவாய் கோட்டாட்சியருமான ஞா.சரவண பெருமாளிடம் தனது வேட்பு மனுவை முதல் வேட்பாளராக தாக்கல் செய்தார். தொடர்ந்து வேட்பாளர் உறுதிமொழி எடுத்து கொண்டார். வேட்பாளர் எழில் இளவரசி செய்தியாளர்களிடம் கூறியதாவது: பொதுமக்களிடம் நாம் தமிழர் கட்சிக்கு நல்ல வரவேற்பு பெற்றுள்ளது.பரமக்குடி தொகுதியில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளான குடிநீர், சாலை வசதி உள்பட பல்வேறு அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படும்.மக்களை தொடர்ந்து சந்தித்து வருகிறோம். ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியான திட்டங்களை செயல்படுத்துவோம் என்றார்.




■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, திண்டுக்கல் எம்.வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முதல் தலைமுறை வாக்காளர்களுக்கு தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலில் தவறாது வாக்களிக்க வேண்டும் என்ற வாசகம் பொறிக்கப்பட்ட அஞ்சல் அட்டைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் வழங்கினார். அருகில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ்பாபு , திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியர் பானுலட்சுமி , தனி வட்டாட்சியர் (கேபிள் டி.வி) மங்கள பாண்டியன் எம்.வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் க.லட்சுமி ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.



# டாக்டர் சிவந்தி ஆதித்தனார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மழலையர்களுக்கு பட்டமளிப்பு விழா

மாதவரம், மார்ச்.31 மாதவரம் தொகுதி செங்குன்றம் அருகே உள்ள டாக்டர் சிவந்தி ஆதித்தனார் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் மழலையருக்கான 16 வது பட்டமளிப்பு விழா சென்னை வாழ் நாடார்கள் சங்கம் மற்றும் காமராஜ் கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைவர் தங்கமுத்து தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.பள்ளியின் முதல்வர் ராஜராஜேஷ்வரி முன்னிலை வகித்தார். முன்னதாக மாணவி அதிதி அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் மேல்நாட்டு நடனம், காட்டுவாசி நடனம், பட்டிமன்றம், கவிதைகள் கூறுதல், வரலாறு கதை கூறுதல், திருக்குறள் ஒப்பித்தல் உள்ளி பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.பின்னர் சிறப்பு அழைப்பாளர்களாக டாக்டர் எஸ். அன்புச்செல்வன், டாக்டர் கிருத்திகா ஆகியோர் கலந்து கொண்டு பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்கான வழிகாட்டுதலை எடுத்துரைத்து மழலையர்களுக்கு பட்டங்களை வழங்கி பாராட்டி வாழ்த்தினர். இதில் சங்க துணை தலைவர்கள் சிற்றம்பலம், செந்தில், சங்கத்தின் பொதுச்செயலாளர் செல்வக்குமார், அறக்கட்டளையின் பொருளாளர் ராஜாமணிமுருகேசபாண்டியன், அறக்கட்டளையின் செயலாளர் சுந்தர் மற்றும் பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். மேலும் இவ்விழாவினை ஆசிரியைகள் விமலா, ஸ்ரீதேவி ஆகியோர் தொகுத்து வழங்கினர். முடிவில் மாணவி மோனிகா அனைவருக்கும் நன்றி கூறினார்.

## கிருஷ்ணகிரி சட்டமன்றத் தேர்தல்

# அதிமுக செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம் வேட்பாளர் அசோக் குமார் அறிமுகம்





கிருஷ்ணகிரி, மார்ச். 31- வருகின்ற சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, அதிமுக சார்பில் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் அசோக் குமாரை அறிமுகப்படுத்தும் வகையில் செயல்வீரர்கள் ஸ்ரீ வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் காத்தவராயன் தலைமையில், கிருஷ்ணகிரி நகரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் நகர கழக செயலாளர் கேசவன் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து, முன்னாள் எம்.எல்.ஏ மற்றும் கழக துணைப் பொதுச் செயலாளர் கே.பி. முனுசாமி அவர்கள், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான அசோக் குமாரை அதிகாரப்பூர்வமாக வேட்பாளராக அறிமுகப்படுத்தினார். அப்போது, தேர்தல் பணிகளில் செயல்வீரர்கள் தீவிரமாக ஈடுபட வேண்டும் என வலியுறுத்தினார். இந்தக் கூட்டத்தில் மாவட்ட மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், செயல்வீரர்கள், வீராங்கனைகள் பலர் கலந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து விரிவான ஆலோசனைகள் மேற்கொண்டனர். நிகழ்ச்சியில் பாஜக மாவட்ட தலைவர் கவியரசு, பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் மோகன் ராம், அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் மாவட்ட செயலாளர் அறிவழகன்,தமிழ் மாநில காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் தசரதன், தமிழ் மாநில காங்கிரஸ் மாவட்ட தலைவர் ஜெயபிரகாஷ், புரட்சி பாரதம் கட்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வினோத், கழக மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் பரிதா நவாப், எம்.ஜி.ஆர் மன்ற மாவட்ட இணை செயலாளர் முனி வெங்கட்டப்பன், மாவட்ட கழக இன செயலாளர் மனோரஞ்சிதம் நாகராஜ், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய செயலாளர்கள் கன்னியப்பன், பையூர் ரவி, சூர்யா, காவேரிபட்டினம் நகர செயலாளர் விமல், மாவட்ட விவசாய அணி மோகன், மாவட்ட சிறுபான்மை பிரிவு மக்பூல், மாவட்ட கட்டுமான தொழிலாளர் அணி ஆஜி, மாவட்ட இளைஞரணி கார்த்தி, மாவட்ட மாணவர் அணி ராகுல் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

வாக்காளர்களை நேரடியாக சந்தித்து கட்சியின் சாதனைகளை எடுத்துரைப்பது, வாக்கு சேகரிப்பு பணிகளை விரிவுபடுத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. மேலும், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் மற்றும் கூட்டணி பிரதிநிதிகள் கலந்து கொண்டு முன்னிலை வகித்தனர். இதன் மூலம் கிருஷ்ணகிரி தொகுதியில் அதிமுகவின் தேர்தல் பணிகள் மேலும் தீவிரமடைந்துள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர். இறுதியாக, கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சோக்காடி ராஜன் நன்றி கூறினார்.



# மீண்டும் இபிஎஸ் ஆட்சி!" - மீனாட்சி அம்மன் சன்னதியில் செல்லூர் ராஜு சிறப்பு பிரார்த்தனை

மதுரை, மார்ச் 31 மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் நான்காவது முறையாக போட்டியிடும் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு, தமிழகத்தில் மீண்டும் அதிமுக ஆட்சி அமைக்க வேண்டும் எனக் கோரி எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக வர வேண்டுமென அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு பிரார்த்தனை செய்தார். மதுரை மாநகர் மாவட்ட அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் இணைந்து நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வில்வ இலை, பூமாலை, வாஸ்திரம் உள்ளிட்டவை சமர்ப்பிக்கப்பட்டு பூஜைகள் நடைபெற்றன. மேலும், தொகுதியில் செய்யப்பட்ட வளர்ச்சி பணிகள் குறித்த துண்டுப் பிரசுரங்களும் பகிரப்பட்டன. பின்னர் தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. செய்தியாளர்களை சந்தித்த செல்லூர் ராஜு, "தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைநிறுத்தி, விலைவாசி குறைத்து, போதை இல்லா மாநிலமாக மாற்றக் கூடிய தலைவர் இபிஎஸ் தான். அவர் சொல்வதை செய்வார், செய்வதையே சொல்வார் என்பது மக்களுக்கு தெரியும்," என்றார். மேலும், "அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மாபெரும் வெற்றி பெறும். எந்தக் கட்சி எப்படிப் போட்டியிட்டாலும், மக்கள் நம்பிக்கை எங்களுடனே உள்ளது. இறுதி முடிவை மக்கள் தான் தீர்மானிப்பார்கள்," என்றும் அவர் தெரிவித்தார்.

# திமுகவுக்கு அதிர்ச்சி! 500க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணைப்பு கருணாகரன் முன்னிலையில் திருப்பரங்குன்றத்தில் பரபரப்பு



மதுரை ,மார்ச் 31 மதுரை திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வில்லாபுரம் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திமுகவிலிருந்து 500க்கும் மேற்பட்டோர் விலகி அதிமுகவில் இணைந்தது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. திமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்துராமலிங்கம் அவர்களின் மகனும், திமுக பகுதி செயலாளருமான கருணாகரன், தனது ஆதரவாளர்கள் ஆண்கள், பெண்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோருடன் திமுகவை விட்டு விலகி, மதுரை அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளரும் திருப்பரங்குன்றம் தொகுதி எம்எல்ஏவுமான ராஜன் செல்லப்பா தலைமையில் அதிமுகவில் இணைந்தார். இந்நிகழ்ச்சியில், இணைந்தவர்களுக்கு ராஜன் செல்லப்பா கட்சி துண்டை அணிவித்து வரவேற்று வாழ்த்துகளை தெரிவித்தார். மேலும், அதிமுக தகவல் தொழில்நுட்ப அணி மாநில செயலாளர் ராஜ் சத்யன், தொகுதி, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சி பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இந்த கூட்டணி மாற்றம், திருப்பரங்குன்றம் தொகுதி அரசியல் நிலவரத்தில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது.



# குன்னூர் தொகுதி திமுக வேட்பாளர் கே. எம். ராஜு அவர்களுக்கு உற்சாக வரவேற்பு

நீலகிரி, மார்ச்.,31- 2026 சட்டமன்ற தேர்தலில் நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்ற தொகுதியின் மதசார்பாற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளராக அறிவிக்கப்படுள்ள நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம். ராஜு அவர்களுக்கு குன்னூர் அண்ணா சிலை அருகிலும், கோத்தகிரி ஜான்சன் சதுக்கத்திலும் திமுக கூட்டணி கட்சி சார்பில் மாபெரும் வரவேற்பு வழங்கப்பட்டது. முன்னதாக குன்னூர் தொகுதி வேட்பாளர் கே.எம்.ராஜு அவர்கள் மற்றும் கூடலூர் தொகுதி வேட்பாளர் மு.திராவிடமணி ஆகியோர், கழக தேர்தல் பணி செயலாளர் கா.ராமசந்திரன் மற்றும் நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் முன்னிலையில் குன்னூர் பேருந்து நிலையம் முன்பு உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



■ மதுரை திருப்பரங்குன்றம் தொகுதி திமுக வேட்பாளர் கிருத்திகா தங்கபாண்டி, வில்லாபுரம் பூ மார்க்கெட்டில் ஆதரவாளர்களை சந்தித்து வாழ்த்துகள் பெற்றார். பின்னர் பொதுமக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். நிகழ்வில் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சி பிரமுகர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.




■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாக்காளர்களிடையே 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கான தேர்தல் விழிப்புணர்வு இலச்சினை (Logo)ä மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், வெளியிட்டார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ். மாவட்ட வருவாய் அலுவலர் வ.சங்கரநாராயணன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திவ்யான்ஷிநிகம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க மாவட்ட திட்ட அலுவலர் பாபு ஆகியோர் உடனிருந்தனர்



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், 51 ஊத்தங்கரை (தனி) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கலுக்கான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன், வட்டாட்சியர் ராஜலட்சுமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், 51 ஊத்தங்கரை (தனி) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, சிங்காரப்பேட்டை மாவட்ட எல்லை சோதனைச்சாவடியில் பறக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வாகன தணிக்கை பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை ஆகியோர் இன்று (30.03.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

# மாதம்பட்டி ரங்கராஜின் மரபணு பரிசோதனை அறிக்கை நீதிபதியிடம் ஒப்படைப்பு: வழக்கறிஞர் ஆணையர் தகவல்

சென்னை, மார்ச்.,31- பிரபல சமையல் கலைஞர் மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு பரிசோதனை நடத்தப்பட்டு, முடிவுகள் சீல் வைத்த கவரில் மத்தியஸ்தர் நீதிபதி பி.என். பிரகாஷிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக, வழக்கறிஞர் ஆணையர் சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் தெரிவித்துள்ளார். திருமணம் செய்து ஏமாற்றி விட்டதாக, சமையல் கலைஞர் மாதம்பட்டி ரங்கராஜுக்கு எதிராக, ஆடை வடிவமைப்பாளர் ஜாய் கிரிசில்டா, சமூக வலைதளங்களில் பதி விட்ட பதிவுகளில், மாதம்பட்டி பாகசாலா நிறுவனத்தையும் இணைத்திருந்தார். இதை எதிர்த்து மாதம்பட்டி பாகசாலா நிறுவனம் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், இந்த விவகாரம் தொடர்பாக, மாதம்பட்டி ரங்கராஜ் ஜாய் கிரிசில்டா இடையில் மத்தியஸ்தம் செய்ய உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி பி.என். பிரகாஷை மத்தியஸ்தராக நியமித்துள்ளது. இந்த வழக்கு விசாரணையின் போது, தனது குழந்தையின் தந்தை மாதம்பட்டி ரங்கராஜ் என நிரூபிக்க, அவருக்கு மரபணு சோதனை நடத்தப்பட வேண்டும் என ஜாய் கிரிசில்டா தரப்பிலும், மரபணு சோதனைக்கு தயார் என மாதம்பட்டி ரங்கராஜ் தரப்பிலும் தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக இரு தரப்பிலும் மனுத் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள தடயவியல் துறையையும், ஆய்வகத்தையும் தொடர்பு கொண்டு, மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு பரிசோதனை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக, வழக்கறிஞர் ஆணையரை நியமித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்நிலையில், இந்த வழக்கு, நீதிபதி செந்தில் குமார் ராமமூர்த்தி முன்பு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது, ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு பரிசோதனை நடத்தப்பட்டு, அதன் முடிவுகள், மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வு பெற்ற நீதிபதி பி.என். பிரகாஷ் முன், சீல் வைத்த கவரில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக, வழக்கறிஞர் ஆணையர் தெரிவித்தார். இதனையடுத்து, இரு தரப்பினருக்கும் இடையில் மத்தியஸ்த நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மாதம்பட்டி ரங்கராஜ், ஜாய் கிரிஸில்டா தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, வழக்கின் விசாரணையை, நீதிபதி செந்தில் குமார் ராமமூர்த்தி, ஜூன் 8ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டார்



# காரைக்குடி தொகுதியில் சீமான் வேட்புமனு தாக்கல்

காரைக்குடி, மார்ச்.,31-

காரைக்குடி தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இன்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி தனித்துப் போட்டியிடுகிறது. அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், அவரது சொந்த தொகுதியான காரைக்குடியில் இம்முறை களமிறங்கியுள்ளார். இந்த சூழலில், காரைக்குடி தொகுதியில் சீமான் இன்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். வேட்புமனுத் தாக்கல் செய்தபோது சீமானுடன் அவரின் தாய் மற்றும் மனைவி கயல்விழி ஆகியோர் உடனிருந்தனர். காரைக்குடி தொகுதியில் நாதக சார்பில் சீமான், அதிமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள அமமுக சார்பில் தேர்போகி பாண்டி, தவெக சார்பில் பிரபு ஆகியோர் போட்டியிடுகின்றனர். திமுக கூட்டணியில் இந்த தொகுதி காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், காங்கிரஸ் வேட்பாளர் இன்னும் அறிவிக்கப்படவில்லை. இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய சீமான், "ஆட்சிக்கு வந்தால் ரூ.2 ஆயிரம், ரூ.2500, ரூ.3000 தருவதாக தலைவர்கள் வாக்குறுதி அளிக்கின்றனர். படித்துவிட்டு வேலையில்லாதவனுக்கு வேலை கொடுப்பதற்கு பதிலாக, ரூ.4 ஆயிரம் தருவதாக சொல்பவர் எப்படி நல்ல தலைவராக இருக்க முடியும். டாஸ்மாக் கடையை மூடுவதாக ஒருவருமே வாக்குறுதி அளிக்கவில்லையே. பத்தரை லட்சம் கோடி ரூபாய் கடன் இப்போதே உள்ளது. இப்போது நீங்கள் அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற மேலும் பல லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்குவீர்கள். கடன் வாங்கி நிறைவேற்றிய எந்த திட்டமாவது தரமாக உள்ளதா?. ஒரு இனத்தின் மகனாக, இலவசங்கள் கொடுப்பதை தன்மானத்துக்கு எதிரானதாக நினைக்கிறேன். நேர்மையான நல்லாட்சியை கொடுப்பதாக சொல்பவர்கள் ஏன் இலவசங்களை கொடுக்கவேண்டும். மலை, மணல், இயற்கை வளம் எல்லாவற்றையும் சுரண்டிவிட்டார்கள், எதிர்காலம் என்னவாகும். கள்ளச்சாராயம் குடித்து இறந்தவனுக்கு ரூ.10 லட்சம் கொடுத்து ஊக்கப்படுத்திய அரசுதானே இது. இவர்கள் கொடுக்கும் இலவசத்துக்கு ஏன் கையேந்த வேண்டும். நம் மானமும், வீரமும் மரத்துப்போய்விட்டதா?. அவர்கள் கைக்காசில் இருந்தா இலவசம் தருகிறார்கள். அனைத்து வரிகளையும், விலைவாசிகளையும் உயர்த்தி தான் இலவசம் கொடுக்கிறார்கள். அத்தியாவசிய பொருட்களை வாங்கும் தற்சார்பு நிலையை கூட மக்களுக்கு ஏற்படுத்த முடியவில்லையா?" என்றார்

# மேலும் 2 எல்பிஜி கப்பல்கள் இந்தியா வர ஈரான் அனுமதி

டெஹ்ரான், மார்ச்.,31-

மேலும் 2 எல்பிஜி டேங்கர் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து இந்தியா செல்ல ஈரான் அனுமதி வழங்கியுள்ளது. ஈரான் போர் காரணமாக ஹார்முஸ் ஜல சந்தியை ஈரான் மூடியது. கச்சா எண்ணெய் போக்குவரத்தில் 5ல் ஒரு பங்கு ஹார்முஸ் ஜலசந்தி வழியாகத்தான் நடைபெறுகிறது. இதை ஈரான் மூடியதால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்தது. ஹார்முஸ் ஜலசந்தியை திறந்து வட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. ஆனால் இந்தியா, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், இராக் ஆகிய 5 நட்பு நாடுகளின் கப்பல்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி நேற்று முன்தினம் அறிவித்தார். ஈரான் போர் தொடங்கியதில் இருந்து, இதுவரை 4 எரிபொருள் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து இந்தியா வந்துள்ளன. இந்நிலையில் மேலும் 2 எல்பிஜி டேங்கர் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க ஈரான் அனுமதித்துள்ளது. இந்த கப்பல்களில் 90,000 டன்களுக்கு அதிகமாக சமையல் காஸ் கொண்டு வரப்படுகிறது. இந்த 2 கப்பல்களும் வளைகுடாவை கடந்து இந்தியா வந்து கொண்டிருக்கின்றன. மேலும் 5 எரிபொருள் கப்பலகள் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க ஐக்கிய அரபு அமீரகம் அருகே காத்துக் கிடக்கின்றன.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161